**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-050420213871

Volume: 5

Issue: 4

Month: April

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 16.01.2021

Accepted: 27.02.2021

Published: 01.04.2021

Citation:
Kasthuri, S. "Imagine the Effect." *Shanlax International Journal of Tamil Research*, vol. 5, no. 4, 2021, pp. 79–83.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i4.3871

*Corresponding Author:
c.kasthuri.phd@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Imagine the Effect

**S. Kasthuri**
*Associate Professor and Head, Department of Tamil*
*Kamaraj College, Thoothukudi, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0001-9159-7006

**Abstract**-Many literatures have appeared and developed from the Sangam period to the present. In general, all of these descriptions have commonalities and their own distinctive features. These distinctive features make it possible to view literature as a separate genre. Some objected to this classification. But many voiced support.

**Keywords:** Aspirational fantasy, Sangam period, Sangam literature, specialties, general characteristics, fantasy world, consciousness, Utopia

**References**

1. John Samuel, G., Literary Comparison Domains, P.34.
2. The Encyclopaedia of Religion, Vol.15, P.159.
3. Veerasamy, T.V., Tamil Novel Types, P.35.
4. Pichchamuthu, N., Literary Movements, P.149.
5. Kasturi Rangan, K., Dhinamani Kathir, 13 January, 1991, P.3.
6. Sachchidanandan,Y., Western Literary Vocabulary, P.221.
7. Macmillan, Op.Cit., P.177.
8. Encyclopaedia of Britanica, Vol.12, P.220.
9. Kailasapati, K., Sociology and Literature, P.88.
10. Veerasamy, Tha. Ve.,Tamil Novel Types, P.46.
11. Sachchidanandan, Y., Western Literary Vocabulary, P.72.

# விழைவுக்கற்பனை

முனைவர் செ. கஸ்தூரி
இணைப் பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்
காமராஜ் கல்லூரி, தூத்துக்குடி

**முன்னுரை**

*சங்க காலம் முதல் இக்காலம் வரையில் பல இலக்கியப் படைப்புகள் தோன்றி வளர்ச்சி அடைந்துள்ளன. இவ்விலக்கிய வகைமைகள் அனைத்திலும் பொதுப்பண்புகளும் அவற்றுக்கேயுரிய தனித்தனிச்சிறப்புப் பண்புகளும் காணப்படுகின்றன. இத்தனிச் சிறப்புப் பண்புகள் படைப்புகளைத் தனித்தனி வகையாகப் பார்க்கத் தூண்டுகின்றன. இங்ஙனம் வகைப்படுத்திப் பார்ப்பதைச் சிலர் எதிர்த்தனர்; பலர் ஆதரவுக் குரல் கொடுத்தனர். சங்க இலக்கியப் பாடல்களில் விழைவுக் கற்பனையைப் பொருத்திக் காணும் முயற்சி, இக்கட்டுரையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

***முக்கியச் சொற்கள்:*** *விழைவுக் கற்பனை, சங்க காலம், சங்க இலக்கியம், சிறப்புப் பண்புகள், பொதுப் பண்புகள், கற்பனை உலகு, நனவுலகு*

மேலைநாட்டு இலக்கியங்களில்தான் விழைவுக்கற்பனைப் படைப்புகள் தனி செல்வாக்குப் பெற்றன. பின்னர்தான் தமிழ் இலக்கியங்களிலும் விழைவுக்கற்பனையைத் தனி இலக்கிய வகையாகக் கருத்தில்கொண்டு படைப்புகள் படைக்க முற்பட்டனர். பொதுவாக எந்த இலக்கிய வகையும் வெற்றிடத்திலிருந்து திடீரென்று அற்புதச் செயல் ஒன்றினைப் போன்று முகிழ்த்தெழுவது கிடையாது. ஒரு பொருளிலிருந்து, மற்றோரு பொருள் வளர்ச்சி பெற்று உருப்பெறுவதைப் போன்று இலக்கிய வகைகளும் ஒன்றை அடிப்படையாகக்கொண்டு ஒன்றிலிருந்து மற்றொன்று வளர்ந்து உருப்பெறுவதாகவும் கூர்தலறக் கோட்பாட்டினை மையமாகக் கொண்டும் இலக்கிய வகை ஒப்பீட்டினை மேற்கொண்ட அறிஞர்கள் நம்பினர்[1]. இக்கூர்தலறக் கோட்பாட்டின் அடிப்படையில் மேலை இலக்கியத் தாக்கத்திற்கு முன்னரே தமிழில் விழைவுக் கற்பனைச் சிந்தனைகள் காணப்பட்டன. எனினும் விழைவுக் கற்பனைப் படைப்புகள் தனி இலக்கியவகையாக மேலை இலக்கியத் தாக்கத்திற்குப் பின்னரே மலரத் தொடங்கியுள்ளன.

## சொற்பொருள் வரையறை

UTOPIA என்னும் சொல் OU & TOPOS (NO PLACE) அல்லது EU & TOPOS (GOOD PLACE) என்னும் இரு கிரேக்கச் சொற்களின் அடியாகப் பிறந்தது[2]. இக்கிரேக்கச் சொல்லின் அடிப்படைச் சொல் எங்கும் இல்லாத என்று பொருள்படும்.. UTOPIA என்னும் சொல்லுக்கு இணையாகத் தமிழ்ப் புனையுலகம் என்ற சொல்லைத் தா. வே வீரசாமியும்[3], அதீதக் கற்பனை என்று நா. பிச்சமுத்துவும்[4], புது உலகம் என்று கி.கஸ்தூரிரங்கனும்[5], கற்பனைக் கனவு என்று வை. சச்சிதானந்தமும்[6] பயன்படுத்தியுள்ளார்கள். அனைவரும் பிரிந்துகொள்ளும் வகையிலும் UTOPIA என்பதன் வரைவிலக்கணத்தோடு மிக நெருங்கிய தொடர்புடையதுமான விழைவுக்கற்பனை என்ற சொல் இங்கு பயன்படுத்தப்படுகின்றது.

## விழைவுக் கற்பனை விளக்கம்

விழைவுக் கற்பனை என்பது அடிக்கடிக் குழப்பத்தை உண்டு பண்ணக்கூடிய வெவ்வேறு கருத்தினைக் கொண்டுள்ளது

1. விழைவுக்கற்பனை என்பது எல்லாப் பரிபூரணமும் நிறைந்த ஒரு கற்பனை உலகம்.

2. நடைமுறையில் இல்லாத அரசியல் மற்றும் சமுதாய வாழ்க்கையை இது பிரதிபலிக்கும்.
3. இறந்த காலத்தைக் குறிப்பதாக அல்லாமல் எதிர்கால நோக்குடன் எதிர்காலத்தில், தொலைந்த சொர்க்கம் மீண்டும் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அமைகிறது.

கவிஞன் தான் விழைகின்ற ஒரு முழுமையான சமுதாயத்தைக் கற்பனை உலகில் சித்திரித்துக் காட்டுவதே விழைவுக் கற்பனையாகும்.

## மேலை இலக்கியங்களில் விழைவுக்கற்பனை

சர். தாமஸ் மூர் என்பவரால் இலத்தீன் மொழியில் நடைமுறைக்கு ஒவ்வாத உலகத்தைக் கற்பனையில் சித்திரித்துக் காட்டியதே UTOPIA என்னும் நூலாகும். 1516 ஆம் ஆண்டில் நூலாக வெளியிடப்பட்டது. ரால்ப் ராபின்சன் என்பவரால் 1551 ஆம் ஆண்டு ஆங்கில மொழியாக்கம் செய்யப்பட்டது[7].

கி,மு. நான்காம் நூற்றாண்டில் பிளாட்டோ குடியரசு என்ற நூலை எழுதினார். இந்நூல் தான் தாமஸ் மூர் முதல் எச்.ஜி.வெல்ஸ் வரை அனைவருக்கும் முன்னோடியாக இருக்கிறது[8].

## தமிழ் இலக்கியங்களில் விழைவுக்கற்பனை

மனித நாகரிகம் தோன்றிய காலம் முதல் பல்வேறு நாடுகளில், பற்பல காலக்கட்டங்களில் பல சிந்தனையாளர்கள், எல்லோரும் இன்பமாக வாழ வேண்டும் எனும் நோக்குடன் பல கருத்துக்களையும் திட்டங்களையும் வகுத்து வைத்திருக்கிறார்கள். மேலை இலக்கியங்களில் பொதுமைச்சிந்தனை மேலோங்கிய காலக்கட்டங்களில் தமிழ் இலக்கியங்களிலும் இச்சிந்தனைப் படைப்புகள் படைக்கப்பட்டுள்ளன.

ஆதியிலே மனிதன் சிறுசிறு இனக்குழுக்களாக வாழ்ந்தபோதும் வீரயுகத்திலும் பொதுவாகப் பாடுபட்டு உண்டு வாழ்ந்து வந்ததால், இங்கு பகுத்து அளித்தல் என்ற பொதுமைச் சிந்தனை காணப்பட்டது. அரசுகள் நிலைத்து அரசர், வணிகர், உழவர், அடிமையோர் எனச் சமுதாயம் ஏற்றத்தாழ்வு பெற்ற சங்கம் மருவிய காலத்திருந்தே அறம் என்ற கோட்பாட்டைத் தழுவியனவாகப் பொதுமைச் சிந்தனைகள் இலக்கியங்களில் இடம் பெறலாயின[9].

**பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை**
**வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்**

என்று வள்ளுவர் உணவைப் பிறருடன் பகிர்ந்து உண்ண வேண்டுமெனக் கூறுகிறார். வள்ளுவருக்குப் பின் வந்த சாத்தனார், இளங்கோவடிகள், திருத்தக்கத்தேவர் முதலான புலவர் பெருமக்கள் பொதுமைக் கொள்கைகளை விளக்கிக் காட்டுகின்றனர். சான்றாகப் பகுத்துண்ணாமை ஒரு பாவச்செயல் என்று சீவகசிந்தாமணியில் பகரப்படுகிறது. ஆயினும் கம்பனது இராமாயணத்திலேயே இது முழுநிறைவாகக் காணப்படுகிறது என்று க. கைலாசபதி குறிப்பிடுகின்றார்.

பழங்காலத்தில் சமயக் கருத்துக்களாக இடம்பெற்ற பொதுமைச் சிந்தனைகள் இருபதாம் நூற்றாண்டில் அரசியல் சமுதாய விஷயங்களாக உருப்பெற்றன. பாரதியின் கவிதைகளில் மட்டுமன்றி அவரது கட்டுரைகளிலும் பொதுமைச் சிந்தனைகள் புலப்படுகின்றன.

**இல்லை என்ற கொடுமை – உலகில்**
**இல்லையாக வைப்பேன்**

என்று சூளுரைக்கின்றார். பாரதியின் ஞானரதம் சிறந்த கற்பனைப் படைப்பாய் அமைந்துள்ளது. இந்நூலில் பின்னர் எழுந்த விழைவுக்கற்பனைப் படைப்புகள் அனைத்திற்கும் முன்னோடியாய் விளங்கியது. ஆயினும் இவரது கற்பனையுலகு நனவுலகத்திற்குரிய நடைமுறை வேட்கையை ஒட்டியதாக அமைந்துள்ளது.

பாரதியின் சீடராக விளங்கியவர் வ.ரா. (வ.ராமசாமி). இவர் பாரதியின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி விழைவுக்கற்பனை இலக்கியம் படைத்தார். நம் நாட்டில் பெண் என்பவள் அடிமையாகப் பிறந்து அடிமையாகவே இறப்பதைப் பார்த்து அவளுடைய அடிமைத்தனத்தை ஒழித்துப் புதிய விடுதலை பெற்ற பெண்ணினமாக ஆட்சி செய்யும் புது உலகாக வ.ரா கோதைத் தீவைப் படைத்துக் காட்டுகிறார். இந்நூலில் பெண்ணே எல்லா உரிமையையும் பெற்று, ஆண்கள் வெறும் பார்வையாளராக வாழும் மற்றொரு எல்லைக்கே சென்றுவிட்ட கற்பனை உலகாகப் படைத்துள்ளார். இத்தகைய கற்பனை பெண்விடுதலையை வற்புறுத்திக் கூறுவதாக அமைந்துள்ளது. வ.ராவின் கோதைத் தீவு இந்தியா சுதந்திரமடைவதற்கு முன்னைய காலகட்டத்தில் எழுதப்பட்டது. மக்களின் ஒன்றுபட்ட உரிமைக்குப் போராடிய, பாரதியின் வழிவந்த வ.ரா ஆண்களும் ஒரு வகையில் அடிமைகளாக வாழும் நிலையை எண்ணிப்பார்ப்பதற்கு இதனை எழுதியதாக எடுத்துப் பார்[10]. என்று வீராசாமி கூறுகிறார். இதையடுத்து மு.வரதராசன் கி.பி.2000 சிறந்த படைப்பாக வெளிவந்தது. எண்ணிய எண்ணம் வீண்போகாது எண்ணியவர் திண்ணியவர் ஆக வேண்டும் என்று நினைத்ததே கி.பி.2000 என்ற நூல் எழுதத் தூண்டுகோலாக அமைந்துள்ளது. துன்பத்திலிருந்து விடுதலை பெற அல்லது துன்பத்தைப் போக்கும் மருந்து காண்பதற்குத் தனது மனதில் தோன்றிய எண்ணங்களைக் கனவாக்குகிறார். அதாவது பொல்லாத உலகம் என்று வெறுப்படைவது நீங்கி, உலகத்தை அறிவு நிலையம் என்றும் குடும்பத்தை அன்பு நிலையம் என்றும் வாயாரப் புகழ்ந்து இன்பமாய் உயிர்விட மாட்டேமோ? என்று எண்ணும் போது, தூக்கம் கனவுலகத்திற்கு அழைத்துச் சென்றதன் பயனே கி.பி.2000 உருவாகுவதற்குக் காரணமாய் அமைந்தது.

மு.வரதராசனாரை அடுத்து சுஜாதா அறிவியல் முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு அறிவியல் நோக்கில் சமுதாய முன்னேற்றத்தை எண்ணிப் பார்க்கிறார். இவரது படைப்பான ‘சொர்க்கத் தீவு’ மேலை இலக்கியத் தாக்கத்தின் காரணமாகப் படைக்கப்பட்டுள்ளது சொர்க்கத் தீவு மனிதன் எந்த அளவுக்குக் கணினி அடிமையாகிவிட்டான் என்பதையும் மருந்துகள் மூலம் மனித மனங்களையே கட்டுப்படுத்துகின்ற அளவு அறிவியல் முன்னேற்றமடைந்துள்ளது என்பதையும் விளக்குகிறார். இவரது மற்றோரு படைப்பான கிபி 2000 க்கும் அப்பால். அடுத்து வரும் காலகட்டத்தில் நிகழவிருக்கும் விஞ்ஞான அற்புதங்களைப் படம்பிடித்துக்கட்டி அதன் விளைவாக மனித சமுதாயத்தில் ஏற்படும் முன்னேற்றங்களை எடுத்துக்காட்டுகிறது. தினமணிக் கதிரில் கஸ்துரி ரங்கன், புது உலகம் இன்றே என்ற தலைப்பில் தொடர்கதை ஒன்றை விழைவுக் கற்பனை நோக்கில் எழுதி வந்தார். சங்ககாலம் முதல் இன்றைய காலகட்ட வரையில் பலபடிநிலைகளில் விழைவுக்கற்பனைச் சிந்தனைகள் தமிழ் இலக்கியங்களில் சிந்தனைகளாகத் தோன்றித் தனி இலக்கியமாக வளர்ச்சியடைந்துள்ளன.

## விழைவுக்கற்பனைகளில் சமுகம்

விழைவுக் கற்பனைப் படைப்புகள் தோன்றுவதற்குக் காரணமே சமூக அமைப்புப் பற்றிய எண்ணம் தான் அடிப்படையாக அமைகின்றது. விழைவுக் கற்பனை செய்யும் படைப்பாளிகள், தம் கண்முன்னே காணும் சமூகத்தின் அவலங்கள் மேடு பள்ளங்கள் பற்றிய சிந்தனைகளில் ஆழ்ந்தபிறகு தான், தாம் விரும்பும் குறிக்கோள் உலகத் தினைப் படைக்கின்றனர். நடைமுறைச் சமுதாயத்தில் செயல்படுத்த முடியாத செயல்களைக் கற்பனை உலகில் படைத்து அச்சமுதாயத்தை அல்லது மக்களை மகிழ்ச்சியில் திளைப்பவர்களாக காட்டுகின்றனர்.

விழைவுக்கற்பனை (UTOPIA) மகிழ்ச்சியான உலகைக் கற்பனை செய்கிறது என்றால் எதிர் விழைவுக் கற்பனை (DYSTOPIA) மகிழ்ச்சியற்ற கற்பனை உலகைப் படைத்துக் காட்டுவதாக அமைகின்றது. அதாவது தற்காலத்தில் அரசியல் சமுதாயத் தொழில்துறை முன்னேற்றங்களிலுள்ள பிரச்சினைகள் எதிர்காலத்தில் எவ்வகையில் எல்லாம் உச்ச நிலையை அடையப்போகின்றன என்பதை பற்றிய சிந்தனைகள் யாவும் எதிர் விளைவுக் கற்பனையில் இடம்பெறுகின்றன. சுஜாதா தமது படைப்பான சொர்க்கத்தீவில் எதிர் விளைவுக்கற்பனையைக் கையாண்டுள்ளர்.

## உத்திமுறை

புதுமையான உள்ளடக்கத்தைக் கூறும்போது புதிய உத்திகள் ஆசிரியரால் வெளிப்படுத்தப்படுகின்றன. விழைவுக்கற்பனைப் படைப்புகள் யாவும் கனவுக்காட்சி உத்தி முறையிலேயே விளக்கப்படுகின்றன. இடைக்காலக் கவிஞர்களால் பெரிதும் கையாளப்பட்ட கூற்று அமைப்பு இது. வசந்த காலச் சூழ்நிலையில் கதை சொல்வோன் துயில் கொள்ளுகிறான். தான் விவரிக்க இருக்கும் நிகழ்ச்சிகள் அவன் கனவில் காண்கின்றான்[11]. இவ்வாறாகக் கலைஞன் தான் கூற விரும்பும் செய்திகளைக் கனவின் மூலம் சுவைஞனுக்கு வெளிப்படுத்தி நிறைவு செய்யும் நோக்கில் விழைவுக்கற்பனைப் படைப்புகள் சிறப்பாக அமைந்துள்ளன.

## முடிவுரை

விழைவுக்கற்பனை என்பது யதார்த்தத்திற்கு அப்பாற்பட்ட சிந்தனைகளை முன்வைத்தாலும் நடைமுறையிலுள்ள சீர்கேடுகளை எடுத்துக் காட்டுவதனால் இஃது நடைமுறை உலகைச் சீர் செய்வதற்குப் பயன்படக்கூடிய வழிகாட்டியாக அமைகின்றது.

## குறிப்புகள்

1. ஜான் சாமுவேல், ஜி. *இலக்கிய ஒப்பாய்வுக் களங்கள்*, ப. 34.
2. The Encyclopaedia of Religion, Vol. 15, P. 159
3. வீராசாமி, தா.வே. *தமிழ் நாவல் வகைகள்*. ப. 35.
4. பிச்சமுத்து, ந. *இலக்கிய இயக்கங்கள்*, ப. 149.
5. கஸ்தூரி ரங்கன், கி. *தினமணி கதிர்*, 13 ஜனவரி 91, ப. 3.
6. சச்சிதானந்தன் மேலை, வை. *இலக்கியச் சொல்லகராதி*, ப. 221,.
7. Macmillan, Op.Cit., P. 177
8. Encyclopaedia of Britanica, Vol. 12, P. 220
9. க கைலாசபதி, சமூகவியலும் இலக்கியமும், ப .88.
10. தா. வே. வீராசாமி , தமிழ் நாவல் வகைகள், ப.46.
11. வை. சச்சிதானந்தன் , மேலை இலக்கியச் சொல்லகராதி, ப .72.